**குருணாகல் பிரதேச சபை**
**குருணாகல் மாவட்டம்**

-------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 செப்தெம்பர் 29 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து குருணாகல் பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) ரூபா 10,165,200 தொகையான வேலைக் கடன்கொடுத்தோர் நிதிக்கூற்றுக்களிலிருந்து கைவிடப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 135,612 தொகையான வேலை நிர்வாகச் செலவினக் கடன்பட்டோர் நிதிக்கூற்றுக்களிலிருந்து கைவிடப்பட்டிருந்தது.

(இ) டொயொட்டா டபள் கப் வாகனத்தின் பெறுமதியான ரூபா 7,900,000 தொகை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் நன்கொடையாகக் கிடைக்கப்பெற்ற ரூபா 707,573 தொகையான நூலகப் புத்தகங்கள் இருதடவை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் இறுதியில் காகிதாதிகள் இருப்பு ரூபா 166,107 தொகை குறைவாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் இறுதியில் மின்சார களஞ்சிய இருப்பு ரூபா 168,447 தொகை குறைவாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் இறுதியில் ஆதனவரி நிலுவை ரூபா 16,721,705 தொகை அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் சம்பளங்களிலிருந்து உள்ளுராட்சித் திணைக்களம் நேரடியாகச் செலுத்திய ரூபா

373,150 தொகையான விதவைகள், அனாதைகள் பங்களிப்பு கிடைக்க வேண்டிய சம்பள மீளளிப்பாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) அபிவிருத்தி உத்தியோகத்தரின் முன்னைய ஆண்டின் சம்பள மீளளிப்பு ரூபா 725,259 தொகை அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) ரூபா 12,649,406 தொகையான மாஸ்பொத்த சுடலைக் கூட காணி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) ரூபா 350,000 தொகையான புளுகஹமுலவத்த காணி இரு தடவைகள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஔ) கொஸ்கஹமுலவத்த காணியின் ரூபா 6,000,000 பெறுமதியானது ரூபா 60,000,000 ஆக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(க) நிலையான சொத்துப் பதிவேட்டில் காணப்படுகின்ற இரண்டு காணிகள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கா) 06 கட்டிடங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(கி) சபைக்குச் சொந்தமான 03 வாகனங்களின் பெறுமதி இனங்காணப்பட்டு நிதிக்கூற்றக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற 05 கணக்கு விடயங்களுக்குரிய மீதிக்கும் உரிய பட்டோலைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 18,798,687 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

### 1.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 100,589,297 கூட்டுப்பெறுமதியான 11 கணக்கு விடயங்களுக்கான ஏடுகள் மற்றும் பட்டோலைகள் போன்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையினால் அவற்றைக் கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமைகள்

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 80 | சபையில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற பிணை வைக்க வேண்டிய பொறுப்புவாய்ந்த 13 உத்தியோகத்தர்களினால் குறித்த பிணைப்பணம் வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் 396(ஈ) | வழங்கப்பட்டு 06 மாத காலத்தை விஞ்சிய ரூபா 13,722 பெறுமதியான 02 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 124,733,524 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 38,327,915 ஆக இருந்தமையால் நிதி விளைவுகளில் ரூபா 86,405,609 தொகையான அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

அனுமதிப்பத்திரக் கட்டணம், சேவைகளுக்கான கட்டணம் மற்றும் ஏனைய வருமானங்கள் முறையே ரூபா 1,283,746 தொகை ரூபா 4,504,838 தொகை மற்றும் ரூபா 85,934,794 தொகையினால் அதிகரித்தமை நிதி விளைவின் அதிகரிப்பு தொடர்பில் பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா 147 மில்லியனாக இருந்ததுடன் உள்ளபடியான வருமானம் ரூபா 184 மில்லியனாக இருந்தது. முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 11 மில்லியனான கிடைக்க வேண்டிய மீதி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 154 மில்லியன் வரை அதிகரித்திருந்தது.

#### 2.3.2 வீதவரியும் வரியும்

மீளாய்வாண்டில் ரூபா 13,363,000 தொகையான மதிப்பீடு செய்யப்பட்ட வீதிவரி மற்றும் வரிகளில் இருந்து ரூபா 10,258,000 அறவிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 10,485,808 தொகையான திரண்ட நிலுவையில் முன்னைய ஆண்டுகளின் நிலுவையை அறவீடு செய்யும் செயல்முன்னேற்றம் நலிவான நிலையில் காணப்பட்டது.

#### 2.3.3 ஏனைய வருமானம்

மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 143 மில்லியன் அறவிட வேண்டியிருந்ததுடன் அதில் ரூபா 26 மில்லியன் முன்னைய வருடங்களுக்குரியதாகும்.

#### 2.3.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 7,184,487 தொகையான நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் ரூபா 120,131,696 தொகையான முத்திரைக் கட்டணம் என்பன அறவிடவேண்டியதாகக் காணப்பட்டது.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) தீர்க்கப்படாமல் காணப்பட்ட ரூபா 13,550 தொகையான ஊழியர் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபை அதிகாரப் பிரதேசத்தில் தொலைபேசிக் கோபுரங்கள் தொடர்பாக கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டின் போது வீதி அபிவிருத்திக்குத் தேவையான பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்காக உடன்படிக்கை செய்யப்பட்ட நிறுவனத்தால் கூறுவிலைகளுக்குரிய நிபந்தனைகள் மீறப்பட்டதன் காரணமாக மீண்டும் கூறுவிலை கோரும் போது முன் உடன்படிக்கை செய்யப்பட்ட நிறுவனமே தெரிவு செய்யப்பட்டதன் அடிப்படையில் கூறுவிலையினை விஞ்சி ரூபா 226,890 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2016 ஆம் ஆண்டில் கொள்வனவுகளை மேற்கொள்ளும் போது உரிய மாதிரிகள் தயாரிக்கப்பட்டு கூறுவிலை பெறப்படாதிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டின் இறுதி மூன்று மாதகாலத்தில் 27 சந்தர்ப்பங்களின் போது ரூபா 873,215 தொகையான பொருட்கள் கொள்வனவின் போது வழங்குனர்கள் முறையற்ற வகையில் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

### 3.3 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

சுந்தராபொல பிரதேசத்தில் கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையமொன்றை நிர்மாணித்து குருணாகல் மாநகர சபையும் குருணாகல் பிரதேச சபையும் இணைந்து கழிவுப்பொருள் சேகரிப்பதற்காக பலவருட காலமாக உடன்படிக்கை செய்யப்பட்டு செயற்பட்டிருந்தது. அவ்வாறு இருக்கும் போது மாகாண குறித்தொதுக்க அபிவிருத்தி மானியத்தின் கீழ் ரூபா 1,097,298 தொகை செலவில் உக்காத கழிவுப்பொருட்களை சேகரித்து வேறுபடுத்துவதற்காக கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

### 3.4 ஒப்பந்த நிர்வாகத்தின் நலிவுகள்

புதிய கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தின் வேலி மற்றும் சுவர் என்பன ரூபா 606,968 செலவில் பூர்த்தி செய்யப்பட்டு 06 மாதங்கள் கடப்பதற்கு முன்னர் ரூபா 21,120 தொகையான 10 கம்பித் தூண்கள் உடைந்திருந்தன.

## 04. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு நலிவுகள் அவ்வப்போது பிரதேச சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| | முறைமைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | பதிவேடு, புத்தகங்கள், பட்டோலை பேணப்படாமை அல்லது நாளதுவரையாகப் பேணப்படாமை. |
| | | பதிவேட்டிற்கும் கணக்குகளுக்கும் இடையே வேறுபாடுகள் மற்றும் இணங்காணப்படாத மீதிகள் காணப்பட்டமை. |
| | | நிதிக்கூற்றுக்களில் மீதி உறுதிப்படுத்தல்களுக்கான பதிவேடு காணப்படாமை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | வருமான நிர்வாகம் | நிலுவை வருமான அறவிடல்களில் நலிவு மற்றும் தொலைபேசி பரிவர்த்தனை கோபுரங்கள் தொடர்பான வருமானம் அறவிடப்படாமை. |
| (இ) | கொள்வனவுகள் | பெறுகைகள் வழிகாட்டல் பின்பற்றப்படாமை |